museum of modern
and contemporary art
sri lanka

**–இதோ, 2023 இல் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள்!**

2022 ஆம் ஆண்டில் MMCA இலங்கையின் செயற்பாடுகள், பயிற்சிகள் மற்றும் ஆராய்ச்சிக்கு நிதியுதவியுடன் ஆதரித்த அனைவருக்கும் நாங்கள் நன்றி கூற விரும்புகிறோம். உங்கள் ஆதரவுடன், நவீன மற்றும் சமகால கலைகளுக்கு இலங்கையில் புதிய பார்வையாளர்களை கட்டியெழுப்புவதற்கு MMCA இலங்கை உதவுகிறது. நாம் வாழும் இக்காலகட்டத்தில், புரிந்துணர்வை அதிகரிப்பதற்கும் சிந்தனையைத் தூண்டுவதற்கும் கலாச்சாரம் முக்கிய பங்கு வகிக்கிறது. கலாச்சாரம் வகிக்கும் இப்பங்கினை கலை வரலாறுகள் எமக்கு நினைவூட்டுகின்றன; அத்தகைய வரலாறுகளை ஆராய்ந்து, அவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான கண்காட்சிகளை நடாத்த உங்கள் ஆதரவு உதவுகிறது.

'சந்திப்புகள்' கண்காட்சியின் 3வது சுழற்சியை (மார்ச் 19 2023 அன்று முடிவடைகிறது) நீங்கள் பார்வையிடவில்லை என்றால், தயவுசெய்து வந்து கண்காட்சியைப் பார்வையிடவும். உங்களை அழைத்துச் செல்லவும், உங்கள் கேள்விகளுக்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பதிலளிக்கவும் காட்சியறைகளில் உள்ள 'வருகையாளர்களின் கல்வியாளர்கள்' ஆவலாக உள்ளனர். ஏ. மார்க் (1933–2000), ஜோர்ஜ் கீட் (1901–1993), நெலுன் ஹரஸ்கம (b. 1959), ஜனனி குரே (b. 1974) ஆகியோரின் படைப்புகள் கண்காட்சியில் புதிதாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டிற்கான எமது புதிய சுவாரஸ்யமான திட்டத்தின்கீழ், மே மாதத்தில் 'அந்நியர்' என்ற தலைப்பில் எங்கள் அடுத்த கண்காட்சியும், ஒக்டோபர் மாதத்தில் எங்கள் இரண்டாவது தீவிர அருங்காட்சியகப் பயிற்சியும் நடத்தப்படவுள்ளன. இவற்றைப் பற்றிய மேலதிக விபரங்களையும், இன்னும் பல சுவாரஸ்யமான நிகழ்வுகள் மற்றும்

கண்காட்சிகள் பற்றிய விபரங்களையும் விரைவில் உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு ஆவலாக உள்ளோம்!

## _2022 ஆம் ஆண்டினை மீள நோக்குதல்

இலங்கையில் 2022 ஆம் ஆண்டானது, அரசியல் மற்றும் பொருளாதார குழப்பங்கள் நிறைந்தவொரு ஆண்டாக இருந்தது. இவ்வாண்டில் பொதுமக்கள் ஒன்று கூடி சுதந்திரத்திற்குப் பின் ஏற்பட்டுள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு எதிராக போராட்டம் நடத்தியதைக் கண்டோம். போராட்டங்கள் மற்றும் எரிபொருள் பிரச்சனைகளால் அருங்காட்சியகம் வெவ்வேறு நேரங்களில் மூடப்பட்டிருந்த போதிலும், நாங்கள் 16,000 பார்வையாளர்களை வரவேற்று, இலவச கண்காட்சிகள் மற்றும் நிகழ்வுகளை வழங்கினோம்.

கொழும்பு 3 இல் அமைந்துள்ள 'க்ரெஸ்கட் புலவாட்' இன் தரைத்தளத்தில் உள்ள புதிய அமைவிடத்தில் 2022ம் ஆண்டு பெப்ரவரி 10ம் திகதியன்று MMCA இலங்கை தனது இரண்டாவது கண்காட்சியை 'சந்திப்புகள்' என்ற தலைப்பில் ஆரம்பித்தது. இக்கண்காட்சியானது மூன்று தொடர்ச்சியான சுழற்சிகளாக திறக்கப்பட்டுள்ளது. பெப்ரவரி முதல் டிசம்பர் 2022 வரை, 101 இலவச பொது நிகழ்ச்சிகளில் 1,869 பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்; இந்நிகழ்ச்சிகளில் 15 கலரி உரையாடல்கள், 19 பயிற்சிப்பட்டறைகள், 31 எடுத்தாளுனரின் சுற்றுப்பயணங்கள் ஆகியவற்றுடன், ஜிக்ஸா-புதிர் நாட்கள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் திரைப்படத் திரையிடல்கள் உட்பட்ட 30 சிறப்பு நிகழ்வுகளும் உள்ளடங்கும். MMCA இலங்கையின் சமூக ஈடுபாடு நிகழ்ச்சிகளின் ஒரு அங்கமாக நடத்தப்பட்ட 28 எடுத்தாளுனரின் சுற்றுப்பயணங்களில் மேலும் 656 பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

MMCA இலங்கை வளரும்போது, அதன் பயிற்சி முயற்சிகளும் வளர்ச்சியடைகின்றன. 2022 ஆம் ஆண்டில், இலங்கை முழுவதிலுமிருந்து 18 நிறுவனங்களை ஈடுபடுத்திய எங்கள் முதல் தீவிர அருங்காட்சியகப் பயிற்சியை நடத்தினோம். இது நெதர்லாந்தில் உள்ள ரயின்வார்ட் கலைக்கூடம் மற்றும் கலாச்சார மரபு நிறுவனத்துடன் இணைந்து நடத்தப்பட்டது. இந்த ஆண்டின் போது, நாங்கள் 14 நபர்களுக்கு உள்ளுரை பயிற்சி அனுபவங்களை வழங்கியதுடன், எங்கள் சமூக ஈடுபாடு

முயற்சிகளின் ஒரு அங்கமாக 40 வருகையாளர்களின் கல்வியாளர்களைப் பணியமர்த்தினோம். அருங்காட்சியகத்துக்கு வருவதற்கு பாடசாலைகள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு, 6-10 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை நேரத்தின் பின் பங்குபற்றக்கூடியவாறு MMCA Afterschool ஐ ஆரம்பித்து, அதன் மூலம் மாணவர்களை சிந்திக்கத் தூண்டும், வினோதமான மற்றும் ஒத்துழைப்பைக் கட்டியெழுப்பும் கற்றல் அனுபவங்களை அவர்களுக்கு வழங்கினோம்.

## _வருகை தரவும்

தரைத்தளம்
கிரேஸ்கேட் போல்வார்ட்
89 காலி வீதி
கொழும்பு 3

**அனுமதி இலவசம் (அனைத்து நிகழ்வுகளும் இலவசம்)**

**நேரம்**
**தினமும்** **மு.ப. 10-பி.ப. 6வரை**

**போயா மற்றும் பொது விடுமுறைகளில் மூடப்பட்டிருக்கும்.**

மேலதிக தகவலுக்கு, இணையதளம் மூலம் www.mmca-srilanka.org; அல்லது முகநூலில் (Facebook) facebook.com/mmcasrilanka; மற்றும் படவரியில் (Instagram) instagram.com/mmcasrilanka/; இலங்கை MMCAஐப் பின்தொடரவும்.